**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE FOR MCOP CASES, MADURAI.**
**MCOP No. 821/2017**

**Deposition of Witness for the Petitioner RW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சாம்பசிவம் | Caste | : |
| Father / Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of 01/2024

**முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். படித்து பார்த்தேன் சொன்னபடி சரியாக உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தால் விபத்து சமயத்தில் வழங்கப்பட்ட காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ.1. தீர்ப்புரை எ.ம.சா.ஆ.2. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் கு.வி.**

விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1–ன்படி வாகனத்தை ஓட்டும் நபருக்கு காப்பீடு ப்ரீமியம் தொகை பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எ.ம.சா.ஆ.1–ல் உரிமையாளர் ஒரு ஓட்டுநரை வேலைக்கு அமர்த்தி அந்த நபர் ஓட்டுநராக பணிபுரியும் பட்சத்தில் அந்த ஓட்டுநருக்கு விபத்தில் காயம் ஏற்பட்டால் எங்கள் நிறுவனம் காப்பீடு வழங்க கடமைப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் Workmen Compensation Act–ன் கீழ் தான் இழப்பீடு கோர முடியும். மனுதாரர் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்த காரணத்தினாலும், எமசாஆ.1–ன்படி ஓட்டுநருக்கு காப்பீட்டு தொகை ரூ.50/– ப்ரீமியம் தொகை பெறப்பட்டுள்ளதாலும், எ.ம.சா.ஆ.1 Backage Policy என்பதாலும், மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

Sd/– சாம்பசிவம்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒத்துக்கொள்ளப்பட்டது.

**(ஒம்/– திரு.மு.சண்முகவேல் ராஜ்),**
சிறப்பு சார்பு நீதிபதி, மோ.வா.வி வழக்குகள்,
மதுரை.